DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.ஆதில் அகமது யாமின் | Father/Husband Name : ஹாதர்மைதீன் |
| Age : 50 | Village : திருநெல்வேலி |
| Taluk : | Calling : மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26 Feb 2026 11:12

(Accused Present)( not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 09.11.2018 ம் தேதி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 15 வயதுடைய பாலகணேஷ் என்பவர் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தீக்காயப்பிரிவில் 45 சதவீதம் தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு பொது அறுவை சிகிச்சை நிபுணர், கண் மருத்துவர், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மருத்துவர் ஆகியோர்களின் அறிவுரை பெற்று தீக்காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் சிகிச்சையிலிருந்து 28.11.2018 ம் தேதி விடுவிக்கப்பட்டார். அவருக்கு முகம், நெஞ்சு, இரண்டு தொடைகள், வலது கால் ஆகிய இடங்களில் தீக்காயங்கள் இருந்தன. என்னிடம் காட்டப்படும் மேற்படி பாலகணேஷ் என்பவருக்கான சிகிச்சை விவரக்குறிப்புகள் நான் வழங்கியது தான். **(அது அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

3. நான் சிகிச்சை அளித்த நபருக்கு ஏற்பட்ட காயங்கள் அந்த நபர் தீபாவளி பண்டிகைக்கு வெடிக்கப்பட்டது போக இருந்த கழிவு வெடிகளை எடுத்து அதில் உள்ள மருந்துகளை சேர்த்து பற்ற வைக்கும் போது ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

26 Feb 2026 11:20

Judicial Magistrate 2, Sattur.